**வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு - 2016**

---

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இது தொடர்பான விபரமான அறிக்கையொன்று 2017 யூன் 29 இல் கம்பனியின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பும் உரிமைத்துவமும்

1979 ஏப்ரல் 13 இல் தனியார் கம்பனியொன்றாக ஆரம்பிக்கப்பட்ட இக் கம்பனி 1971 இன் 35 ஆம் இலக்க வியாபாரங்களை கையேற்கும் அதிகாரச்சட்டத்தின் கீழ் 1979 யூன் 05 ஆம் திகதிய 39/04 ஆம் இலக்க அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசினால் கையேற்கப்பட்டது. அவ்வாறே அரசுக்கு சொந்தமான முயற்சிகளை பொதுக்கம்பனிகளாக மாற்றும் 1987 இன் 23 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் இந்த கம்பனி பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனியொன்றாவதுடன் அதன் பங்குகளின் உரித்து முழுமையாக திறைசேரியிடம் காணப்படுகின்றது.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

# 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனமானது ஏதேனும் நியமத்தால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் தவிர சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அல்லது வருமானங்களையும் செலவினங்களையும் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாத போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 175,052 ஐயக்கடன் ஏற்பாட்டு மிகை செலவினத்திற்கெதிராக ஈடுசெய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 2,141,466 பொருளாதார சேவைக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்ட வரிகளாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கிடுவதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய சட்டக் கட்டணங்களாக நடைமுறைப் பொறுப்புக்களிற்கெதிராக ஈடுசெய்யப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 877,760,119 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் மேலும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் 57(ஈ) பந்தியின் பிரகாரம், தீர்மானிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளிலிருந்து உண்மையான இலாபம் அல்லது நட்டத்தை நிர்ணயித்தல் விரிவான வருமானக் கூற்றுக்களில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 7,292,562 உண்மையான நட்டம் ஏனைய செயற்பாட்டு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

**2.2.2 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்**

07 ஆம் நியமத்தின் 31 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிதிக் கருவிகளிலிருந்து எழுகின்ற ஆபத்துக்களின் தன்மை மற்றும் அளவை மதிப்பிடுவதற்கு நிதிக்கூற்றுக்களின் பயன்பாட்டாளர்களிற்கு தேவையான தகவல்கள் கணக்குகளிற்கான குறிப்புக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் வட்டி வீத ஆபத்து தொடர்பான தகவல்கள் கம்பனியால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் அச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தின் போது காலக்கழிவிடப்பட்டிருந்தமை கணக்கீட்டுக் கொள்கைகளில் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2008 ஆம் ஆண்டில் அரசாங்க மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 31,221,094 சொத்துக்கள் வருடாந்தம் ரூபா 3,902,637 படி 08 வருடங்களிற்கு காலக்கழிவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 26,753,353 தொகை மாத்திரம் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை கம்பனியால் காலக்கழிவிடப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,829,492 காலக்கழிவு மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 638,249 காலக்கழிவு என்பன நீதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அரசாங்க மானியங்களின் மீதி தவறான கணீப்பீடுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் ரூபா 5,615,264 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய மோட்டார் வாகன பெறுமானத்தேய்வுத் தொகை ரூபா 4,847,767 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக சொத்துத் தொகை அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கம்பனியின் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு முறையே ரூபா 10,476 மற்றும் ரூபா 467,423 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமானத்தேய்வு ரூபா 477,899 ஆல் குறைத்துக் காட்டப்பட்டதன் விளைவாக அந்த சொத்துக்களின் தொகை அதே தொகைகளால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி தொகை ரூபா 6,504,858 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 9,586,890 ஆக வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 3,082,032 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 24,142,870 செலுத்த வேண்டிய விற்பனைத் தரகு மீளாய்வாண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கம்பனியின் பொருளாதார சேவைக் கட்டணங்களின் பிரகாரம், ஆண்டின் முதலாவது மற்றும் இறுதிக் காலாண்டுகளிற்கான ரூபா 3,482,138 பொருளாதார சேவைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் அதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் புத்தக உறுதிச்சீட்டுக்கள், பரிசு உறுதிச்சீட்டு மற்றும் நடு ஆண்டு மிகையூதியங்களாக செலுத்தப்பட்ட ரூபா 15,443,220 மொத்தத் தொகை மிகையூதியக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக ஊழியர் நலன்புரிக் கணக்கு மற்றும் செயலாற்றல் படிகளிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் வரி விதிக்கத்தக்க வருமானம் ரூபா 1,829,879,669 ஆக இருந்ததுடன், பெறுமதி சேர் வரி அறிக்கையினை தயாரிப்பதற்காக வருமானம் ரூபா 1,852,030,397 என கருதியமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெறுமதி சேர் வரி அறிக்கை ஆகியவற்றுக்கு இடையே ரூபா 22,150,728 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறிக்கையினை தயாரிப்பதற்காக வருமானம் ரூபா 1,824,866,850 ஆக கருதியமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறிக்கைகளுக்கிடையே ரூபா 5,012,819 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) பின்வரும் விடயங்களிற்கெதிராக குறிப்பிடப்பட்ட சான்றாதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | வாடிக்கையாளர் கடன்பட்டோர்கள் | 786,464,300 | விபரமான வயதுப் பகுப்பாய்வுடன் கடன்பட்டோர் பட்டியல் |
| (ii) | ஏனைய கடன்பட்டோர்கள் | 15,674,565 | |
| (iii) | நூலகப் புத்தகங்கள் | - | கசற்கள் மற்றும் நூலகப் புத்தகங்களை மீளக் கையளித்திருக்காத நபர்களின் பெயர்ப் பட்டியல் |

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது கட்டணம் அறவிடப்படாமல் ஒளிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி ரூபா 16,163,159 ஆக இருந்ததுடன், அப் பெறுமதியில் 2008 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய பெறுமதி ரூபா 8,494,552 ஆகும். அப் பெறுமதிகளில் ரூபா 3,000,000 மற்றும் ரூபா 2,702,500 பல தடவைகள் இரண்டு வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட மதிப்பிழந்த காசோலைகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காணப்பட்ட மதிப்பிழந்த காசோலைகளில் ரூபா 7,275,778 பெறுமதிக்காக நட்டக்கழிவு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 2004 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படும் மீள்விற்பனை கடன்பட்டோர் மீதி ரூபா 14,641,729 ஆக இருந்ததுடன் அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்படாமல் முழு மீதிக்கும் நட்டக்கழிவுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) கம்பனியின் சேவைநாடுனர்களுக்கு கடன் வழங்கும் கொள்கையின் பிரகாரம் 03 மாத காலப்பகுதியினுள் கடன் அறவிடப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 786,464,300 தொகையான சேவைநாடும் கடன்பட்டோரிடமிருந்து 03 மற்றும் 06 மாதங்களுக்கு இடைப்பட்ட மீதியான ரூபா 137,954,614 தொகையும், 06 மாதங்களுக்கு மேற்பட்ட 01 வருடத்திற்கு குறைவான கடன்பட்டோர் மீதி ரூபா 89,543,433 தொகையும், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 200,782,625 ஆகவும் காணப்பட்டது. அதன் பிரகாரம் மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 54 சதவீதம் 03 மாதத்திற்கு மேற்பட்டிருந்ததுடன் 19 சதவீதம் அதாவது ரூபா 149,258,497 மீதிக்காக நட்டக்கழிவுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) கம்பனியால் 2010 ஆம் ஆண்டின் போது வெகுஜன ஊடக அமைச்சிற்கு வழங்கப்பட்ட 03 தொலைக்காட்சிகள் தொடர்பில் பெறவேண்டிய ரூபா 269,973 மீளாய்வாண்டின் இறுதி வரையில் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் 2009 ஆம் ஆண்டின் போது கம்பனியின் நான்கு உத்தியோகத்தர்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 35,942 தனிப்பட்ட தொலைபேசிப் பட்டியல் கட்டணங்கள் மீளாய்வாண்டு வரையிலும் மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(உ) கம்பனியால் மீளச் செலுத்தப்பட வேண்டிய ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிப்பிரமாணம் 571 இற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாத காலங்கடந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 859,275 ஆகும்.

(ஊ) வாடிக்கையாளர்களிற்கு வழங்குவதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் எழுதப்பட்டு ஆனால் வழங்கப்படாத ரூபா 4,957,007 பெறுமதியான 645 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு அப் பெறுமதி மீளாய்வாண்டின் போது ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. உரிய தரப்பினர்களால் இத் தொகைகளிற்கான கொடுப்பனவுகள் கோரப்படாதமை அசாதாரண நிகழ்வாக இருக்கும் என அவதானிக்கப்பட்டது.

(எ) 2016 ஆம் ஆண்டின் போது பல சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தனியார் வாடிக்கையாளரிற்கு ரூபா 7,441,948 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 மே மாதம் வரையிலும் அச் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br><br>நிதிப்பிரமாணம் 757 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பொருள் மெய்மையாய்வு 2017 மே 26 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| (i) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளிற்கு உரித்தற்ற 300 உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக மீளாய்வாண்டில் ரூபா 18,681,366 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும் கம்பனியின் முன்னைய தலைவர் மற்றும் தற்போதைய தலைவரினால் சுற்றறிக்கை எல்லைகளை மிகைத்து ரூபா 222,976 பெறுமதியான 1,762 லீற்றர் எரிபொருள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி பெறப்பட்டிருந்தது. |
| (ii) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| • 8.2.2 ஆம் பிரிவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,589,314,674 தொகையை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| • 9.3 ஆம் பிரிவு | பதவியணியின் ஒவ்வொரு பதவிக்கும் மிகத் தெளிவாக மற்றும் விபரமாக தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் காணப்பட வேண்டிய போதிலும் கம்பனியில் அத் திட்டம் காணப்படவில்லை. |
| (iii) 2016 திசெம்பர் 16 ஆம் திகதிய பிஈடி 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டில் பின்வருமாறு கம்பனியால் ஊழியர்களிற்கு மிகையூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |

| | சுயாதீன தொலைக் காட்சி சேவை | வசந்தம் ரீவி | ஐரீஎன் எவ்எம் | வசந்தம் எவ்எம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ------------- | ----------- | ------------- | ----------- | --------------- |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நடு ஆண்டு மிகையூதியம் ரூபா 7,500 வீதம் | 4,007,680 | 177,620 | 519,373 | 105,000 | 4,809,673 |
| நடு ஆண்டு மற்றும் ஆண்டிறுதி புத்தக உறுதிச்சீட்டு படி ரூபா 2,000 வீதம் | 2,424,000 | 40,000 | 194,000 | 34,000 | 2,692,000 |
| காகிள்ஸ் பூட்சிற்றி பரிசு உறுதிச்சீட்டு படி ரூபா 5,000 வீதம் | 7,314,000 | 214,000 | 1,018,000 | 203,000 | 8,749,000 |
| ஆண்டிறுதி மிகையூதியம் | 12,384,195 | 394,407 | 1,452,417 | 259,275 | 14,490,294 |
| மொத்தம் | | | | | **30,740,967** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கம்பனியால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 433,021,231 இலாபம் உழைக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 107,189,266 நட்டம் ஏற்பட்டிருந்தது. இதனால் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஊழியரொருவரிற்கு ரூபா 2,000 மிகையூதியம் மாத்திரம் செலுத்தப்பட முடிந்திருந்த போதிலும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக ஊழியரொருவரிற்கு ரூபா 61,000 படி ரூபா 30,740,967 கூட்டுமொத்தமான மிகையூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

- சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய நிதியாண்டில் நட்டம் ஏற்பட்டுள்ள நிலைமையை அறிக்கையிட்டு அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளிலுள்ள பதவியணியினருக்கான மிகையூதியக் கொடுப்பனவிற்கு முன்னர் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டியதுடன் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் இது தொடர்பான வேண்டுகோள் அனுப்பப்பட வேண்டிய போதிலும் மேற்குறிப்பிட்டவாறு மிகையூதியத்தை செலுத்துவதற்கு பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மிகையூதியம் செலுத்துவதற்காக கம்பனியின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 12 ஆம் இலக்கத்துடன் வழங்கப்பட்ட பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 6.5 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்கள் முறையே 2016 மே 26 மற்றும் 2017 ஏப்ரல் 06 ஆம் திகதிகளிலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நட்டம் ரூபா 107,189,266 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 433,021,231 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 540,210,497 ஆன அதாவது 125 சதவீதமான வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ஒளிபரப்பு நேர விற்பனை வருமானம் ரூபா 656,657,443 ஆல் அதாவது 27 சதவீதத்தால் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கம்பனியின் கீழ் காணப்படும் சுயாதீன தொலைக்காட்சி சேவையால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 526,902,334 இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 8,618,025 நட்டம் வரை அதன் இலாபம் ரூபா 535,520,359 ஆல் அதாவது 102 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. வசந்தம் ரீவி 2015 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட ரூபா 8,932,290 நட்டம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 26,430,929 வரை ரூபா 17,498,639 ஆல் அதாவது 196 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வசந்தம் எவ்எம் மற்றும் ஐரீஎன் எவ்எம் வானொலி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகள் இரண்டிலும் நட்டமடைந்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந் நட்டங்கள் முறையே ரூபா 7,254,218 மற்றும் ரூபா 5,554,284 ஆல் அதாவது 45 சதவீதத்தாலும் 8 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன.

### 3.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் இலாபத்தன்மை விகிதங்கள் மற்றும் தொழிற்படு மூலதன விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | 2016 | 2015 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 65 | 77 |
| தேறிய இலாப/(நட்ட) விகிதம் (சதவீதம்) | (4) | 18 |
| நடைமுறை விகிதம் | 3.97 | 3.67 |
| விரைவு விகிதம் | 4 | 3.63 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கம்பனியின் செய்தி ஒளிபரப்பின் போது இடம்பெற்ற அவமானப்படுத்தல்களிற்கான 04 வழக்குகள் மற்றும் அவர்களின் திரைப்படங்களை அனுமதியின்றி ஒளிபரப்பிய காரணங்களிற்காக 04 வழக்குகள் வெளித்தரப்பினரொருவரால் கம்பனிக்கு எதிராக 08 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவற்றில் 06 வழக்குகளிற்காக வெளித்தரப்பினர்களால் கோரப்பட்டிருந்த நட்டஈட்டுத் தொகை ரூபா 2,560,225,000 ஆகும். அதேநேரம் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவரால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் இந்த வழக்குகளுக்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 920,085 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கம்பனியால் வழங்கப்பட்டிருந்த ஒளிபரப்பு நேரத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 16,752,166 தொகையினை அறவிடுவதற்காக கடன்பட்டோரிற்கு எதிராக 09 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 4,285,977 அறவிடப்பட வேண்டிய இரண்டு கடன்பட்டோர்களின் நிரந்தர வசிப்பிடங்களை கண்டறிய முடியாமையால் அந்த வழக்குகளை தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல முடியாது போயிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 134,807,643 ஆக காணப்பட்ட போதிலும் தொகையை அறவிடுவதற்காக வழக்குகள் தொடரப்பட்டிருந்தமை ரூபா 16,752,166 இற்கு மாத்திரமேயாகும்.

### 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் முன்னைய ஊழியர் ஒருவரால் 2011 ஆம் ஆண்டின் போது மோசடி செய்யப்பட்ட பணத்தில் மேலும் பெறவேண்டிய பெறுமதி ரூபா 1,210,620 ஆனதுடன் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அதற்காக பிடியாணை வழங்கப்பட்ட போதிலும் இதனை வழங்குவதற்கு அவருடைய முகவரியை கண்டறிய முடியாதிருந்தது. அவ் மொத்தப் பெறுமதிக்குமாக நட்டக்கழிவுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் சுயாதீன தொலைக்காட்சி சேவையால் ஒளிபரப்புச் செய்யப்பட்ட 13 உள்ளுர் தொலைக்காட்சி நாடகங்களிலிருந்து ரூபா 50,173,801 நட்டம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

(இ) தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்யும் போது அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட சுயாதீனக் குழு மூலம் இது ஒளிபரப்பிற்குப் பொருத்தமானதா அல்லது இல்லையா என முன் மதிப்பீடு செய்து நாடகத்தின் உள்ளடக்கத்தையும் அதன் தரத்தையும் ஆய்வு செய்வதன் மூலம் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத்தகைய முன் மதிப்பீட்டை மேற்கொள்ளாமல் கம்பனி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளரின் பரிந்துரை மீது 2016 ஆம் ஆண்டில் 154 அத்தியாயங்களுடன் (றாவனா) என பெயரிடப்பட்ட இந்திய தொலைக்காட்சி நாடகம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நாடகத்தின் 61 அத்தியாயங்களை ஒளிபரப்பிய பின்னர் மேற்கொள்ளப்பட்ட உள்ளக

புலனாய்வுகளில் அதன் 61 அத்தியாயங்களை ஒளிபரப்புவதற்காக தொலைக்காட்சி நாடகத்தை கொள்வனவு செய்தல், ஒலிச்சேர்க்கை செலவினங்கள், இறக்குமதி வரி மற்றும் ஒலிபரப்பு காலக் கிரயமாக ரூபா 22,330,935 கூட்டுமொத்தத் தொகை செலவிடப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வருமானமாக ரூபா 850,000 தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்தது. ஆகையால் ரூபா 21,480,935 நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க மிகுதி அத்தியாயத்தை ஒளிபரப்புச் செய்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நாடகத்திற்காக செலுத்த வேண்டியிருந்த முழுத் தொகையையும் செலுத்தாததால் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதை தவிர்ப்பதற்கு ஒளிபரப்புச் செய்யப்படாத 93 அத்தியாயங்களிற்காக இந்தியன் கம்பனிக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,143,423 கொடுப்பனவு மேற்படி கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

2010 ஆகஸ்ட் முதல் 2014 யூலை மாதம் வரை கம்பனியின் செயற்பாட்டு பணிப்பாளராக கடமை புரிந்த உத்தியோகத்தர் மாதாந்த போக்குவரத்துப் படியாக ரூபா 40,000 வீதமும் 140 லீட்டர் எரிபொருளுக்காக எரிபொருள் படியினையும் பெற்றிருந்த போதிலும் கம்பனியின் குழாம் வாகனத்தினையும் பயன்படுத்தியிருந்ததுடன் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட 46,237 கிலோமீற்றருக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 755,950 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.4 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

கம்பனி நட்ட நிலைமையில் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படிகள், செயலாற்றல் ஊக்குவிப்புப் படிகள், மிகையூதியங்கள் மற்றும் பதவியணியினர் நலன்புரி படிகளாக ரூபா 115,599,550 கூட்டுமொத்தமான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

கம்பனிக்குச் சொந்தமான ரூபா 15,093,025 கிரயமான 11 மோட்டார் வாகனங்களில் 03 வாகனங்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்தும் 05 வாகனங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்தும் 02 வாகனங்கள் 2016 சனவரியிலிருந்தும் மற்றும் மேலுமொரு வாகனம் 2016 மே மாதத்தின் பின்னரும் ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 02 வாகனங்கள் கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் முதலாவது ஆகக்கூடிய விலையை சமர்ப்பித்த கொள்வனவாளரால் கொள்வனவு செய்தல் நிராகரிக்கப்பட்ட பின்னர் அதற்காக இரண்டாவது ஆகக்கூடிய விலை சமர்ப்பித்த கொள்வனவாளர் வாகனத்தை கொள்வனவு செய்வதாக கம்பனியால் அறிவிக்கப்படாமையால் தற்போதும் பயன்படுத்தப்படாத வாகனங்களாக காணப்படுகின்றன.

### 4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனியின் பதவியணியினருக்கான அங்கீகாரம் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 யூன் 16 ஆம் திகதிய அமைப/05/விவிட (026) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், ஆலோசனையாளர்களை நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது சுயவிபரத் தரவுகள், அவர்களிற்கு ஒதுக்கப்பட வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட கடமைகள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் மற்றும் காலப்பகுதி என்பவற்றை உள்ளடக்கிய ஞாபனக்குறிப்பை சமர்ப்பிப்பதன் மூலம் அமைச்சரவை உப குழுவின் பரிந்துரையுடன் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது

07 ஆலோசனையாளர்கள் அவ்வாறு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மாதாந்தப் படிகள், வாகன மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 6,713,933 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் இரண்டு ஆலோசனையாளாகளிற்காக 2016 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான 05 மாத காலப்பகுதியின் போது 2910 லீற்றர் எரிபொருளிற்காக ரூபா 325,916 செலவிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது ஆலோசனையாளரொருவர் வேலையை விட்டுச் செல்லும் சந்தர்ப்பத்தில் அவரிற்கு கம்பனியால் வழங்கப்பட்ட அப்பிள் வகை தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி என்பவற்றை மீளப் பெற்றிருக்கவில்லை. மேலும், அவ் உத்தியோகத்தரின் தனிப்பட்ட தொலைபேசி பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக ரூபா 77,669 தொகையும் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகத்தரிடமிருந்து அதனை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் பதவியணியினரை அங்கீகரித்தல் மற்றும் திறைசேரி அங்கீகாரம் என்பன இன்றி கம்பனியின் பதிற்கடமையிலுள்ள தலைவரின் 2016 யூலை 04 ஆம் திகதிய ஐரீஎன்/பிஎவ் ஆம் இலக்க நியமனக் கடிதத்தின் மூலம் கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தரொருவர் நியமனம் செய்யப்பட்டு மாதாந்தப் படிகள், உபசரணைப் படிகள், வாழ்க்கைச் செலவுப் படிகள் மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 919,355 முறையற்றுச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) திறைசேரிச் செயலாளரினால் 2015 சனவரி 21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கம்பனியின் அமைப்பு அகவிதியின் 78 ஆம் பிரிவிற்கிணங்க உள்ளதென குறிப்பிட்டு கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவரொருவர் அவ்வாறு செயற்பாட்டுப் பணிப்பாளர் ஒருவரைப் போன்று உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைப்பு அகவிதியின் 78 ஆம் பிரிவின் மூலம் திறைசேரிச் செயலாளரிற்கு பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை நியமிப்பதற்காக மாத்திரம் அதிகாரம் காணப்பட்ட போதிலும் அதற்கு முரணாக இந் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) கம்பனிக்கான பதவியணியினர் எண்ணிக்கை அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் திறைசேரியின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பதவியணியினர் பட்டியலில் செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அவரிற்கு பணிப்பாளர் சபை அங்கத்தவரொருவராக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் மாதாந்தப் படிகளாக ரூபா 900,000 தொகையும் எரிபொருளிற்காக ரூபா 265,164 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. மேலும் அவரின் பாவனைக்காக கம்பனியின் வாகனமும் ஒதுக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஎடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவை 2017 ஏப்ரல் 06 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியிடமுள்ள வளங்கள், கம்பனியின் ஒழுங்கமைப்புத் திட்டம், கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு போன்ற தகவல்கள் அதனுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட செயற்பணிகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சில செயற்பணிகளும் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 சந்தைப் பங்கு (Market Share)

பார்வையாளர்கள் தொலைக்காட்சியை பார்வையிடுதல் மற்றும் வானொலியை செவிமடுத்தல் தொடர்பில் ''வரையறுக்கப்பட்ட லங்கா சந்தை ஆராய்ச்சி பணியகம்'' (Lanka Market Research Bureau - LMRB) இனால் 15 தொலைக்காட்சி அலைவரிசைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது சுயாதீன தொலைக்காட்சி சேவைக்காக 14.4 சதவீதமாக காணப்பட்ட சந்தைப்பங்கு மீளாய்வாண்டின் இறுதி வரை 8.44 சதவீதம் வரை பின்னடைவுக்கு உள்ளாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது லக்ஹண்ட வானொலி சேவையின் பெயர் ஐரீனன் எவ்எம் ஆக மாற்றுவதற்காக விளம்பரத்தை அச்சிடுவதற்காக ரூபா 1,350,990 தொகையும் விளம்பர முகவர்களிற்காக ஒழுங்கமைக்கப்பட்ட கொக்டெயில் விருந்துபசாரத்திற்காக ரூபா 1,646,000 தொகையுமாக ரூபா 2,996,990 கூட்டுமொத்தத் தொகை வியாபார மேம்படுத்தல் நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் சந்தைப் பங்கை உயர்த்துவதற்கு முடியாதிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பெறவேண்டிய கணக்குகள் | (i) மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) வாடிக்கையாளர் கடன்பட்டோர்களின் அறவீட்டிலுள்ள தாமதங்கள். |
| | (iii) கடன் கால எல்லையை மிகைத்து வாடிக்கையாளர்களிற்கு கடன் வழங்குதல். |
| | (iv) மீள் விற்பனை கொடுக்கல்வாங்கல்களிற்காக இணங்கப்பட்ட சேவைகளை பெறத் தவறியமை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | (i) பதவியணியினரின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் காணப்படாமை. |
| | (ii) திறைசேரியிடமிருந்து பதவியணியினருக்கான அங்கீகாரத்தைப் பெறத் தவறியமை. |